بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 08/05/2026 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# உண்மை மற்றும் நேர்மை: ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் அருளுக்குரிய வாழ்வின் ஓர் ஒளிவீசும் பக்கம்

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை எடுத்துரைக்கும்போது, அன்னாருடைய உண்மைத்தன்மையின் தரம் குறித்த சில சான்றுகளையும், சம்பவங்களையும் எடுத்துரைத்திருந்தேன். இன்றும் சில சம்பவங்களை எடுத்துரைப்பேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மீது டாக்டர் ஹென்றி மார்ட்டின் கிளார்க் என்பவரால் ஒரு கொலை முயற்சி வழக்குத் தொடரப்பட்டது. அது மிகவும் ஆபத்தான ஒரு வழக்காக இருந்தது.

**இது குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: “இந்த வழக்கு எந்த அளவுக்கு அபாயகரமானதாக இருந்தது என்றால், இதில் தூக்குத்தண்டனை கூட விதிக்கப்பட வாய்ப்பிருந்தது.”

**யூதர்களால் ரோமானிய நீதிமன்றத்தில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கைக் குறிப்பிட்டவாறு அன்னார் கூறுகிறார்கள்**: "இத்தகையதொரு வழக்கு என் மீதும் தொடரப்பட்டது. ஈஸா (அலை) அவர்களுக்கு எதிராக யூதர்கள் வழக்குத் தொடர்ந்தனர். ஆனால், இந்த ஆட்சியில் எனக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தவர் ஒரு மதிப்பிற்குரிய பாதிரியாரும் டாக்டரும் ஆவார். அவர் என் மீது கொலை முயற்சி வழக்கைப் பதிவு செய்தார். இதற்காக அவர் முழுமையான சாட்சியங்களைத் திரட்டினார். எந்த அளவுக்கென்றால், இந்த இயக்கத்தின் கடும் எதிரியான மவ்லவி முஹம்மது ஹுசைன் படால்வி கூட நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்தார். அவர் என்னவெல்லாம் செய்ய முடியுமோ, அந்த அளவுக்கு எனக்கு எதிராகச் சாட்சியம் அளித்து வழக்கை முழுமையாக எனக்கு எதிராக நிரூபிக்க முயற்சி செய்தார்.”

இந்த வழக்கு குர்தாஸ்பூர் துணை ஆணையர் கேப்டன் டக்ளஸ் அவர்களின் நீதிமன்றத்தில் நடந்தது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: “எனக்கு எதிராக மிக அழுத்தமாகவும் பெரும் கூச்சலுடனும் அனைத்துச் சாட்சியங்களும் எடுத்துரைக்கப்பட்டன. இத்தகையதொரு சூழலில், நான் இந்த வழக்கிலிருந்து விடுதலையாவேன் என்று எந்தவொரு சட்ட நிபுணரோ அல்லது ஆலோசகரோ கூற முடியாத நிலை இருந்தது. ஆனால், இந்த வழக்கிற்கு முன்பே அல்லாஹ் எனக்குத் தகவல் அளித்திருந்ததைப் போலவே, நான் இதிலிருந்து விடுதலையாவேன் என்பதையும் அவன் முன்கூட்டியே வெளிப்படுத்தியிருந்தான். கேப்டன் டக்ளஸ் அவர்களுக்கு வாதியின் வாக்குமூலத்தின் மீது சில சந்தேகங்கள் இருந்தன. எனவே, அவர் அப்துல் ஹமீதை காவல்துறை அதிகாரி கேப்டன் லெமார்ச்சண்ட் என்பவரிடம் ஒப்படைத்து மீண்டும் விசாரணை செய்யுமாறு கூறினார். கேப்டன், அப்துல் ஹமீதை அழைத்து உண்மையைக்

கூறுமாறு சொன்னார். அப்போதும் அப்துல் ஹமீது, தான் ஏற்கனவே கூறியிருந்த அதே கதையையே மீண்டும் கூறி வந்தார். கேப்டன் சாஹிப் கண்டிப்புடன் உண்மையைக் கூறுமாறு சொன்னபோது, அவர் உண்மையை வெளிப்படுத்தினார். தன்னை மிரட்டித்தான் இந்த வாக்குமூலத்தை கூறச் செய்தார்கள்; மிர்ஸா சாஹிப் அவர்கள் தன்னை ஒருபோதும் கொலை செய்ய அனுப்பவில்லை என்று வெளிப்படையாக ஒப்புக்கொண்டார். இந்த வாக்குமூலத்தைக் கேட்டதும் கேப்டன் மகிழ்ச்சியடைந்து, நாங்கள் வழக்கின் உண்மையை வெளிக்கொண்டு வந்துவிட்டோம் என்று துணை ஆணையருக்குத் தந்தி அனுப்பினார்."

**அன்னார் கூறுகிறார்கள்**: "அந்த நேரத்தில், நீதிமன்றத்தில் உண்மை வெளிப்பட்டதைக் கண்டு துணை ஆணையர் மிகவும் மகிழ்ச்சியடைந்ததையும், எனக்கு எதிராகப் பொய் சாட்சியம் அளித்த அந்த கிறித்தவர்கள் மீது அவர் கடும் கோபம் கொண்டிருப்பதையும் நான் கண்டேன். அந்த கிறித்தவர்கள் மீது தாங்கள் வழக்குத் தொடர முடியும் என்று அவர் என்னிடம் கூறினார். ஆனால் நான் வழக்கு நடத்துவதை விரும்பாத காரணத்தால், நான் வழக்குத் தொடர விரும்பவில்லை; எனது வழக்கு வானத்தில் தொடரப்பட்டுள்ளது என்று கூறினேன்."

**இந்த வழக்கைக் குறித்து எடுத்துரைக்கும்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மையையும் உயர்ந்த ஒழுக்கத்தையும் பற்றி ஜமாஅத்தைச் சேராத மவ்லவி ஃபஸ்ல் தீன் என்ற ஒரு வழக்கறிஞர் இவ்வாறு கூறுகிறார்**: "எனது உள்ளத்தில் மிர்ஸா சாஹிப் அவர்களைக் குறித்து மிகுந்த கண்ணியம் உள்ளது. அன்னாரின் அந்தஸ்தையும் மரியாதையையும் நான் மிகவும் உயர்ந்ததாகக் கருதுகிறேன். அன்னாருடைய வாதங்கள் குறித்து உளவியல் ரீதியாக அன்னாருக்கு உள்ள புரிதலில் சில தவறுகள் ஏற்பட்டிருக்கலாம் என்று நான் கருதினாலும், அன்னார் மிகச்சிறந்த மனிதர் என்பதில் சந்தேகமில்லை."

**இதே சம்பவத்தை ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலி சாஹிப் இர்ஃபானி (ரலி) அவர்களிடம் லாலா தீனா நாத் என்ற இந்து நபர் ஒருவர் எடுத்துரைத்தார். அவர் கூறுகிறார்**: "ஒரு சபையில் மவ்லவி ஃபஸ்ல் தீன் சாஹிப் முன்னிலையில் ஒருவர் அன்னாரை (அதாவது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது அலை..., அவர்களை) கண்ணியமற்ற முறையிலும் தரம் தாழ்ந்த விதத்திலும் எதிர்க்கத் தொடங்கினார். இதைக் கேட்டு மவ்லவி ஃபஸ்ல் தீன் சாஹிப் மிகுந்த ஆவேசமடைந்து, உணர்ச்சிவசப்பட்டு இவ்வாறு கூறினார்: நான் மிர்ஸா சாஹிபைப் பின்பற்றுபவன் அல்ல; அன்னாரது வாதங்கள் மீது எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனால், மிர்ஸா சாஹிபின் மகத்தான ஆளுமைக்கும், ஒழுக்கச் சிறப்பிற்கும் நான் சாட்சியாக உள்ளேன். நான் ஒரு வழக்கறிஞர்; பல்வேறு தரப்பு மக்கள் வழக்கு சம்பந்தமாக என்னிடம் வருகிறார்கள். சட்ட ஆலோசனையின் அடிப்படையில் தமது வாக்குமூலத்தை மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டால், எவ்விதத் தயக்கமுமின்றி அதனை மாற்றிவிடக்கூடிய ஆயிரக்கணக்கான மக்களை நான் பார்த்திருக்கிறேன். ஆனால், எனது வாழ்நாளில் எந்தச் சூழலிலும் உண்மையின் நிலையிலிருந்து விலகாத ஒரு மனிதராக மிர்ஸா சாஹிபை மட்டும்தான் நான் பார்த்திருக்கிறேன்.

மார்ட்டின் கிளார்க் வழக்கில் நான் அன்னாருக்காக ஒரு சட்டப்பூர்வமான வாக்குமூலத்தை ஆயத்தம் செய்து வழங்கினேன். அதை வாசித்துப் பார்த்த அன்னார், இதில் பொய் இருக்கிறதே என்று கூறினார்கள். அதற்கு நான், குற்றம் சாட்டப்பட்டவரின் வாக்குமூலம் சத்தியப்பிரமாணத்தின் கீழ் வருவதில்லை; சட்டப்படி அவர், தான் விரும்பியதைச் சொல்வதற்கு அவருக்கு அனுமதி உண்டு என்று கூறினேன். அதற்கு அன்னார், சட்டம் அனுமதி அளித்திருக்கலாம்; ஆனால் அல்லாஹ் அதற்கு அனுமதி அளிக்கவில்லையே! எனவே, நான் உண்மையான விஷயத்தை மட்டுமே எடுத்துரைப்பேன் என்று கூறினார்கள். பிறகு நாங்கள் அன்னாரிடம், தாங்கள் நீதிமன்றத்தில் தங்களுக்கு அப்துல் ஹமீதை யாரென்றே தெரியாது என்று மட்டும்

கூறுங்கள்; மற்றதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று சொன்னோம். எங்களது அனைத்து ஆலோசனைகளையும் கேட்ட அன்னார், 'நான் உலகில் உண்மையை நிலைநாட்டவே வந்துள்ளேன். எனக்குத் தூக்குத் தண்டனை கிடைத்தாலும் சரி, நான் ஒருபோதும் பொய் சொல்ல மாட்டேன். எனக்கு அப்துல் ஹமீதைத் தெரியும். அவர் காதியானுக்கு வந்து செல்வார். என்ன நடந்தாலும் சரி, என்னால் அவரைத் தெரியாது என்று மறுக்க முடியாது' என்று கூறினார்கள்.

நாங்கள் அன்னாரிடம், பொய் சொல்ல விரும்பவில்லை என்றால், குறைந்தபட்சம் ஒரு மழுப்பலான பதிலை அளிக்கலாமே என்று கூறினோம். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள், என்னால் அவ்வாறும் செய்ய முடியாது. இறைவன் என்னை உலகுக்கு முன்மாதிரியாகத் திகழவே அனுப்பியுள்ளான். உயிரைக் காப்பாற்றுவதற்காக இத்தகையதொரு முன்மாதிரியை வழங்க நான் தயாராக இல்லை. உண்மையைச் சொல்லுவதால் எமது உயிர் போனாலும் சரி, அப்போதும் நாம் வெற்றி பெற்றுவிட்டோம் என்று பதிலளித்தார்கள்.

நீதிமன்றத்தில் ஹுஸூர் (அலை) அவர்கள் தமது வாக்குமூலத்தை அளித்தபோது, தமக்கு அப்துல் ஹமீதைத் தெரியும் என்று வெளிப்படையாக ஒப்புக்கொண்டார்கள். இதைக் கேட்டதும் இனி விடுதலையாவது சாத்தியமில்லை என்று நாங்கள் உறுதியாக நம்பினோம். ஆனால், அந்த வழக்கில் ஹுஸூர் (அலை) அவர்களுக்குக் கிடைத்த இறை உதவி எங்களை வியப்பில் ஆழ்த்தியது. இறைவன் தன்னால் அனுப்பப்பட்டவருக்கு எவ்வாறு உதவினான் என்பதையும், அத்தகைய ஒரு கடுமையான வழக்கிலிருந்து அன்னார் எவ்வாறு கண்ணியமான முறையில் விடுதலையானார்கள் என்பதையும் கண்டு நாங்கள் ஆச்சரியமடைந்தோம்."

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்**: "1916 இல் மிஸ்டர் வால்ட்டர் என்பவர் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி ஆய்வு செய்வதற்காகக் காதியானுக்கு வந்திருந்தார். அப்போது, அஹ்மதிய்யா இயக்கத் தோற்றுனரின் ஏதேனும் ஒரு பழைய ஸஹாபியைச் சந்திக்க வேண்டும் என்று அவர் விருப்பம் தெரிவித்தார். அக்காலத்தில் மர்ஹூம் முன்ஷி அரோடே கான் சாஹிப் (ரலி) அவர்கள் காதியானில் இருந்தார்கள். மிஸ்டர் வால்ட்டர் அவர்களை முன்ஷி சாஹிப்பைச் சந்திக்கச் செய்தோம். மிஸ்டர் வால்ட்டர் முன்ஷி சாஹிபிடம் சம்பிரதாய உரையாடலுக்குப் பிறகு அவர்களிடம், மிர்ஸா சாஹிப் அவர்களின் உண்மைத்தன்மையை ஏற்பதற்கு எந்த ஆதாரம் உங்களை அதிகம் ஈர்த்தது என்று கேட்டார்.

அதற்கு முன்ஷி சாஹிப் (ரலி), நான் அதிகம் படித்தவன் அல்ல; எனக்குப் பெரிய அறிவுப்பூர்வமான ஆதாரங்கள் தெரியாது. ஆனால் என்னை மிகவும் கவர்ந்தது ஹஸ்ரத் சாஹிப் அவர்களின் ஆளுமைதான். அன்னாரை விடச் சிறந்த ஓர் உண்மையாளரையோ, அதிக நேர்மையாளரையோ, இறைவன் மீது அதிக நம்பிக்கை கொண்ட ஒருவரையோ நான் பார்த்ததே இல்லை. அன்னாரைப் பார்த்தாலே, இவர் ஒரு பொய்யர் என்று எவராலும் சொல்ல முடியாது. மற்றபடி, நான் அன்னாருடைய அந்தத் திருமுகத்தைக் காண்பதற்கே ஏங்கிக் கிடந்தேன். எனக்கு அதிக ஆதாரங்கள் தெரியாது என்று பதிலளித்தார்கள்.

இதைக் கூறிய பிறகு முன்ஷி சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நினைவில் எந்தளவு கலங்கிப்போனார்கள் என்றால், அவர்கள் தேம்பித் தேம்பி அழத் தொடங்கிவிட்டார்கள். அழுது அழுது அவர்களது குரல் அடைத்துக்கொண்டது. அதைக் கண்ட மிஸ்டர் வால்ட்டரின் முகம் வெளிறிப்போனது. பின்னர் அவர் தனது 'அஹ்மதிய்யா மூவ்மென்ட்' என்ற நூலில் இந்தச் சம்பவத்தைப் பற்றித் தனித்துவமாகப் பதிவு செய்துள்ளார். அவர் அதில், 'தமது சகவாசத்தில் இத்தகைய

மனிதர்களை உருவாக்கிய ஒருவரை, குறைந்தபட்சம் ஓர் ஏமாற்றுக்காரர் என்று எவராலும் சொல்ல முடியாது' என்று எழுதியுள்ளார்."

**ஹஸ்ரத் மிர்ஸா ரஹீம் பக்ஷ் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்**: "முஹம்மது இப்ராஹீம் என்ற ஓர் அஹ்மதியை நான் சந்தித்தேன். அவரோடு சில விஷயங்களைப் பேசிய பிறகு நான் (ஜமாஅத்தை) ஒப்புக் கொண்டேன். அன்று இரவு எனக்கு ஒரு கனவு வந்தது. அதில் நாங்கள் நான்கு சகோதரர்களும் ஒரு மலையிலுள்ள குகையில் வழிதெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தோம். நான் ஒரு வழியாக மலையின் உச்சிக்கு ஏறி வந்துவிட்டேன். அங்கே ஒரு ரயில் வண்டி ஓடிக்கொண்டிருப்பதைக் கண்டேன். ஆனால் அது தரையிலிருந்து மிக உயரத்தில் இருந்தது. அதன் மீது எவ்வாறு ஏறுவது என்று நான் மலைத்து நின்றபோது, மேலே நின்றிருந்த ஒருவர், வானத்திலிருந்து ஒரு கயிறு தொங்கிக் கொண்டிருக்கிறது. அதைப் பிடி; அப்போதுதான் உன்னால் மேலே ஏற முடியும் என்று கூறினார். மறுநாள் காலை இப்ராஹீம் சாஹிப் என்னைச் சந்திக்க வந்தபோது, எனது கனவை அவரிடம் கூறினேன். அவர் திருக்குர்ஆனைத் திறந்து وَاعْتَصِمُوْا بِحَبْلِ اللّٰهِ (அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்) என்ற வசனத்தைக் காட்டி, இது அதற்கான அடையாளம்தான் என்று கூறினார். உடனே நான் பைஅத் செய்வதற்கான கடிதத்தை எழுதினேன். 'உங்கள் பைஅத் ஏற்றுக்கொள்ளப்பட்டது; ஆனால் கண்டிப்பாக ஒருமுறை காதியானுக்கு வாருங்கள்' என்று பதில் வந்தது."

அவர் கூறுகிறார்: "நான் அமிர்தசரஸ் ரயில் நிலையத்தில் படாலா செல்லும் ரயிலில் ஏறியபோது, என்னுடன் இரண்டு மூன்று வயதான சீக்கியர்கள் அமர்ந்திருந்தனர். அவர்கள் என்னிடம் எங்கே செல்கிறாய் என்று கேட்டனர். நான், காதியானுக்கு என்றேன். மிர்ஸாவின் காதியானுக்கா என்று அவர்கள் கேட்டனர். நான், ஆம் என்றேன். நான் அவர்களிடம் ஹஸ்ரத் சாஹிபைப் பற்றி விசாரித்தேன். அவர்கள் தமது புரிதலுக்கு ஏற்ப, 'அவர் மிகவும் பிரபலம். அவர் கடவுள் என்று வாதிடுகிறார்' என்று கூறினார்கள். நான் ஒரு குறும்பின் காரணமாக அவர்களிடம், 'எனக்கு மிர்ஸா சாஹிபைத் தெரியும்; அவரும் எனது தந்தையாரும் சியால்கோட்டில் ஒன்றாக வேலை செய்தார்கள். அவர்கள் இருவரும் சேர்ந்து பங் எனும் போதையை உட்கொள்வார்கள்' என்று வேடிக்கையாகக் கூறினேன்.

உடனே அந்தச் சீக்கியர்கள், தம்பி! அப்படி ஒருபோதும் சொல்லாதே! அவர் ஒரு துறவி போன்ற மனிதர்; மிகுந்த உண்மையானவர், நம்பிக்கைக்குரியவர். அவரது உண்மைத்தன்மை எந்தளவு பிரபலம் என்றால், மக்கள் அவரை ஒரு முன்மாதிரியாகக் குறிப்பிடுகிறார்கள். எவராவது உண்மையாகப் பேசினால் 'நீ என்ன மிர்ஸா குலாம் முர்தஸாவின் மகனா?' என்றுதான் கேட்பார்கள். அந்த அளவுக்கு அது ஓர் உதாரணமாகிவிட்டது என்றனர். அவர்களில் ஒருவர் கூறும்போது, அவர் (அதாவது மிர்ஸா சாஹிப்) சிறுவயதில் எங்களுடன் விளையாடியவர்; அவர் ஊர்த்தலைவரின் மகன் என்பதால் நாங்கள் அவருக்கு மரியாதை அளித்தோம். பிறகு அவரிடம் மாற்றம் ஏற்பட்டு, அவர் வீட்டுக்குள்ளேயே இருக்கத் தொடங்கினார். அதாவது, தனிமையை மேற்கொண்டார். அவர் உள்ளே உட்கார்ந்து ஏதோ மாந்திரீகம் செய்கிறார் என்றும், காதியானைச் சுற்றி நான்கு மைல் தூரம் வரை மாந்திரீகம் செய்துவிட்டார் என்றும் கூறப்படுகிறது."

அதாவது, அந்த சீக்கியர்கள் அவ்வாறு எண்ணினார்கள்.

"எந்த மதத்தைச் சேர்ந்தவர் அவரிடம் வந்தாலும், அவர்களின் மத ஆதாரங்களைக் கொண்டே தான் உண்மையானவர் என்று நிரூபித்துவிடுகிறார். தான் வானத்திலிருந்து வந்ததாக அவர் கூறுகிறார் என்றும் அந்தச் சீக்கியர்கள் கூறினார்கள். அவர்கள் கூறியதைக் கேட்டுக்கொண்டே நான் காதியான் வந்தடைந்தேன். காதியானில் விருந்தினர் இல்லத்தில் இறங்கியபோது, அங்கு மூன்று நான்கு சிறுவர்கள் இருந்தனர். நான்

அவர்களைச் சோதிப்பதற்காகக் கடுமையாகப் பேசினேன்; ஆனால், அவர்கள் அதற்குப் பதிலாக மிகுந்த கனிவுடனும் ஒழுக்கத்துடனும் என்னிடம் நடந்துகொண்டனர். காதியானில் கடும் வெயில் நிலவியது. நான் திரும்பிப் போய்விடலாம் என்று எண்ணியபோது, வழியில் ஓர் அரேபியரைச் சந்தித்தேன். அவர் என்னிடம், இப்போது வந்திருக்கிறீர்கள்; ஹஸ்ரத் சாஹிபைப் பார்க்காமல் செல்லாதீர்கள். இத்தகைய காலம் மீண்டும் வாய்க்காது என்றார். அதற்குள் பாங்கோசை கேட்டது. ஆகவே, தொழுதுவிட்டுப் போகலாம் என்று எண்ணினேன். தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் (அலை) அவர்கள் சபையில் வந்து அமர்ந்தார்கள். அன்னார் தலையைக் குனிந்தவாறு அமர்ந்திருந்தார்கள். நான் அன்னாருக்கு முன்னால் நின்றிருந்தேன். எனது தாடி மற்றும் மீசையை நான் முழுமையாக மழித்திருந்தேன். அன்னாரது முகத்தைப் பார்க்கும் வரை எனக்கு முழுமையான உறுதி ஏற்படாது என்று என் மனதிற்குள் சொல்லிக் கொண்டேன். சிறிது நேரத்திற்குப் பிறகு ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் தமது முகத்தை உயர்த்திப் பார்த்தார்கள். அன்னாருடைய முகத்தைக் கண்டதும், அன்னார் உண்மையாளர் என்று எனது உள்ளம் கூறியது. மீண்டும் அன்னார் தமது முகத்தை உயர்த்திப் பார்த்தபோது, 'ஆமன்னா' (நாங்கள் ஈமான் கொண்டோம்) என்று கூறினேன். மூன்றாவது முறை பார்த்தபோது, நான் அன்னாருக்காக என்னையே அர்ப்பணித்துவிட்டேன்."

**ஹஸ்ரத் சவுத்ரி ஸர் ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: "நான் முதல்முறையாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை லாகூரில் பார்த்தபோது எனது உள்ளத்தில் ஏற்பட்ட தாக்கம் என்னவென்றால், 'இவர் உண்மையாளர்; இவர் சொல்வது உண்மை' என்பதுதான். அன்னாரைக் குறித்து அல்லாஹ்விடமிருந்து எத்தகையதோர் அன்பு எனது உள்ளத்தில் இடப்பட்டது என்றால், அதுவே எனக்கு அன்னாரது உண்மைத்தன்மைக்கான அசல் ஆதாரமாக அமைந்தது. அப்போது நான் ஒரு சிறுவனாக இருந்தபோதிலும், அன்றுமுதல் இன்றுவரை எனக்கு எந்த ஆதாரமும் தேவைப்படவில்லை. அதற்குப்பிறகு எனது ஈமானை உறுதிப்படுத்தக் கூடிய பல சம்பவங்கள் நிகழ்ந்திருந்தாலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் அருளுக்குரிய முகத்தைப் பார்த்து நான் ஈமான் கொண்டிருந்ததால் அந்தத் தாக்கமே இன்றுவரை அன்னாரது வாதத்தின் உண்மைத்தன்மைக்கு எனக்குப் பெரிய சான்றாக விளங்குகிறது."

இந்த உண்மையை உணர்ந்து, நாம் என்றும் உண்மையின் மீது நிலைத்திருக்கவும், உண்மையின் உயரிய தரங்களைப் பின்பற்றி நடக்கவும் அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பு அளிப்பானாக. ஆமீன்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِی الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)